# தூதன்

தூதன்-27 டிசம்பர் 2018 தூது-11

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்." (லூக்கா 2:11)




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 04 |
| உதவி ஆயரம்மா மடல் | 06 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 10 |
| செயலர் மடல் | 12 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 14 |
| பேசு சிறப்பு இயேசு பிறப்பு | 16 |
| மகிழ்ச்சி மாத சிறப்பு நிகழ்ச்சிகள் | 18 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| கிறிஸ்மஸ் மரம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| Health Tips | 26 |
| Children’s Corner | 28 |
| ஆராதனை பாடல்கள் | 31 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary | 35 |
| Hezekiah - 13th King of Judah | 39 |



**P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645**
**Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae**

# சபை போதகர் மடல்

உலக மீட்பராம் இயேசுகிறிஸ்துவின் உன்னதத் திருப்பெயரில் என் அன்பின் வாழ்த்துக்கள். 2018-ம் ஆண்டின் நிறைவான மாதத்தில் ஆண்டவரின் திருக்கரம் பற்றி நடைபோட நமக்குக் கிடைத்த நல்வாய்ப்புக்காக நன்றியுள்ள இதயத்துடன் ஆண்டவரைப் போற்றிடுவோம்.

மீண்டும் ஒரு கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்கள், மனதை மகிழச் செய்யும் பரவசமான காலங்களைக் காணக் கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். நம்மை மீட்க, நம்மைத் தேடி இப்பூமியில் வந்து பிறந்த அந்த மகிழ்ச்சியின் நன்னாளை திருக்குடும்பங்களாக ஒன்றிணைந்து கொண்டாடி மகிழ ஆயத்தமாவோம்.

"உமக்கு முன்பாக மகிழுகிறார்கள்." ஏசாயா 9:3

They Rejoice Before You. Isaiah 9:3

இவ்வுலகில் மகிழ்ச்சியில் பலவகையுண்டு. மகிழ்ச்சிக்கான காரணங்களும் பலவுண்டு. ஆனால் ஏசாயா சுட்டிக் காட்டும் மகிழ்ச்சி, நெகிழ்ச்சியான அனுபவத்தின் விளைவு. நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்பட்டு வாழ்விழந்த நிலைமையில் இருந்த புறஜாதியாராகிய கலிலேயா மக்களினத்திற்கு வாழ்வு தரும் நற்செய்தியாக மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவருக்கும் விடுதலை தரும் நற்செய்தியாக மேசியாவின் பிறப்பை முன்னறிவிக்கும் செய்தியாக இந்த நற்செய்தியை ஏசாயா அறிவிக்கிறார்.

இந்த நற்செய்தியின் பேரொளி ஏற்படுத்திய விளைவுதான் மகிழ்ச்சி. அது ஆண்டவருக்கு முன்பாக வெளிப்படுத்தப்படும் மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியின் தன்மையை இரண்டு அனுபவங்களின் ஊடாக ஏசாயா வெளிப்படுத்துகிறார்.

1. அறுவடை நாளின் மகிழ்ச்சி - Rejoice at the Time of Harvest: விவசாயிகளின் வாழ்வில் பெரும் மகிழ்வைத் தரும் நாளொன்று உண்டு என்றால் அது அறுவடைநாள் மட்டுமே. தன்னுடைய நிலத்தை உழுது, பண்படுத்தி, தேவையான உரமிட்டு, நாற்று நட்டு, நீர்ப்பாய்ச்சி, அதினதின் காலத்தில் தேவையான பராமரிப்பு தந்து, களைகளைக் களைந்து, தேவையான ஊட்டம் தந்து, அறுவடைக்காக வயல்வெளிகள்

காத்திருக்கும்போது இவ்வளவு நாள் பட்ட பாடுகளுக்குக் கடவுள் எனக்கு நல்ல பலன் தந்தார் என்றெண்ணி குடும்பமாகக் கடவுளுக்கு நன்றி சொல்லி மகிழும் மகிழ்ச்சியைப்போல இருளில் வாழ்ந்த மக்களுக்கு, மரண இருளின் தேசத்தில் விடிவுக்காகக் காத்திருந்த மக்களுக்கு மேசியாவின் பிறப்பின் நற்செய்தி அமைந்தது என்று ஏசாயா விவரிக்கின்றார். இன்றும் நம் வாழ்வில் அனுதின போராட்டங்கள் சவால்களின் நடுவில் "மேசியா" பிறந்தார் என்ற செய்தி மகிழ்வின் அனுபவமாக நம்மில் மலரட்டும்.

2. கொள்ளையைப் பங்கிடும் நாளின் மகிழ்ச்சி - Rejoice when dividing the Plunder: மகிழ்ச்சியின் மற்றொரு நன்மையாகக் கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்ளுகையில் களிகூறுவது போலவும் மகிழுகிறார்கள். போரில் வெற்றிபெற்ற நாட்டைச் சார்ந்தவர்கள் தோல்வியடைந்த நாட்டைக் கொள்ளையிடுவது வழக்கம். அப்படிக் கொள்ளையிட்ட பொருட்களைத் தங்களுக்குள் பங்கிடும்பொழுது, எனக்கு இவ்வளவு பெரிய பங்கா என்று வியந்த நிலையில் தனக்குள் மகிழ்வது போல, மனித மாண்புகள் மறுக்கப்பட்டு, உணர்வுகள் சிதைக்கப்பட்ட நிலையில் இருந்த கலிலேய மக்களுக்கு மேசியாவின் பிறப்பு அமைந்தது மகிழ்வைத் தந்தது.

கலிலேயா மக்களுடைய வாழ்வின் மகிழ்வைப் பெருகச்செய்த அன்பின் ஆண்டவர், இன்றைய கலிலேயராகிய நம்முடைய வாழ்விலும் மகிழ்வைப் பெருகச் செய்து, வளப்படுத்தி, வழிநடத்துவாராக.

இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது. கிறிஸ்துவின் வெளிச்சத்தை நாமும் காணுவோம். நம்மில் அது தொடர்ந்து ஒளிவீசட்டும்.

இறைமக்கள் அனைவருக்கும் ஆயரம்மா Mary Victor, மகள் Blessy மற்றும் என்னுடைய சார்பிலும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

ஆண்டவரின் அருளாசி நம் அனைவருடனும் என்றும் தங்கியிருப்பதாக.

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# உதவி போதகர் மடல்

## தேவன் நம்மைச் சந்தித்ததே கிறிஸ்மஸ்

மனிதனைச் சந்தித்து இரட்சிக்கும்படிக்கு வெளிப்பட்ட இரட்சணியக் கொம்பாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள். கிறிஸ்து பிறப்பைக் கொண்டாட ஆயத்தப்படுகிற நமக்குக் கர்த்தர் இந்த மாதத்தில் கொடுக்கும் வாக்குத்தத்தம்:

உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்
நம்மைச் சந்தித்திருக்கிறது. லூக்கா 1:79(b)

தேவன் வாக்குப்பண்ணின இரக்கத்தின்படி தம்முடைய குமாரனை, மனிதனைச் சந்திக்கும்படி அனுப்பினார் (லூக்கா 1:69). நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது குமாரனை நம்மைச் சந்திக்கும்படிக்கு அனுப்பினார் (1 யோவான் 4:9). அனுப்பப்பட்டவர், என்னவெல்லாம் நம்மைச் சந்தித்துக் கொடுக்கும்படி புறப்பட்டு வந்தார் என்பதை இம்மாதத்தில் தியானிப்போம்.

### 1. சந்தித்து, கேளாததைக் கொடுத்தார்:

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திலே தோன்றும்முன், அநேக ராஜாக்கள், தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், மக்கள் தலைமுறைகள் தோன்றினர். வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப் போட்டது (கலா.3:22b). இதிலிருந்து இரட்சிக்கப்பட எதைத் தேவனிடம் கேட்க என்று யாருக்கும் தெரியவில்லை. மட்டுமல்ல, பலிகளும், காணிக்கைகளும் பாவத்தை நிவிர்த்தி செய்யமுடியவில்லை (எபி.10:4,5,6). நமக்குக் கேட்கத் தெரியாவிட்டாலும், நம் ஆத்துமாவைக் காக்க விரும்பின தேவன், தம் அன்பில் ஐசுவரியமுள்ளவராய், நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்பட தம்முடைய குமாரனை இரட்சகராகத் (MESSIAH) தீர்க்கதரிசிகளால் முன்குறிக்கப்பட்டவரை அனுப்பினார் (மத்தேயு 1:21).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைப்பட்டிருந்தபோதும், தங்கள் உபத்திரவத்தினிமித்தம் தேவனை நோக்கி, முறையிட்டனர் (யாத்.2:23), பெருமூச்சு விட்டனர் (2:24), கூக்குரலிட்டனர் (3:9). ஆனால் இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற, தேவனிடம் என்ன கேட்கவெனத் தெரியவில்லை. அப்போது தேவன், யேகோவா என்னும் நாமத்தால் தம் ஜனத்தை இரட்சித்து, தம்முடைய தாசனாகிய மோசேயை இரட்சகராக அனுப்பினார் (6:23).

அப்படியே ஆபிரகாமுக்கும், ஈசாக்கைப் பலியிடச் சென்றபோது, அவன் ஜீவனை மீட்க, தேவனிடம் என்ன கேட்கவென்று தெரியவில்லை. அப்போது தேவன், யேகோவாயீரே (ஆதி.22:14) என்னும் நாமத்தினால் ஆபிரகாமைச் சந்தித்து, ஈசாக்கின் ஜீவனை மீட்கும்படி ஆட்டுக்கடாவைத் தமக்குப் பலியிடும்படி காண்பித்தார் (ஆதி.22:13). நம் ஆத்துமா இரட்சிப்படையும் வழி இன்னதென்று அறியாதிருக்கிறோமா? ஜீவன் உண்டாகும்படி வெளிப்பட்ட நல்ல மேய்ப்பன் இம்மாதத்தில் உங்களைச் சந்தித்து, உங்கள் ஆத்துமா இரட்சிப்படையும்படி செய்வார் (மத்.6:8).

### 2. சந்தித்து, காணாதவைகளைக் காணச்செய்தார் :

மனிதரில் யாரும் காணக்கூடாத தேவன் (1தீமோ.6:16) தம்முடைய குமாரன் மூலம் காணப்பட்டார். மனிதன் பாவத்தினிமித்தம் தேவனுக்குச் சத்துருவானான் (ரோமர் 5:10). சத்துருவானதினிமித்தம் தேவன் நமக்கு நன்மை செய்யமுடியவில்லை, நம்மால் தேவனையும், அவருடைய வல்லமையின் செயலையும் காணமுடியவில்லை. காணக்கூடாத தேவன், தம்முடைய குமாரன் மூலம் தம்மைக் காண்பிக்கவும், காண்பித்து அவர் மூலம் நாம் நன்மையையும், விடுதலையையும், சுகவாழ்வையும் காணும்படிக்கும் (அப்.10:38) அனுப்பினார்.

சகரியாவும் தன் வாழ்வில் பிள்ளைப்பேற்றின் நன்மையைக் காணக்கூடாதபடிக்கு வயது சென்றவனாயிருந்தான். அப்போது தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, தம் வார்த்தையால் அவனைச் சந்தித்து (லூக்கா 1:13), காணக்கூடாத பிள்ளைச் செல்வத்தின் நன்மையைக் காணும்படி செய்தார். அப்படியே, இஸ்ரவேல் ஜனங்கள், வனாந்திரத்தில் பசியினால் வருத்தப்பட்டபோது, அவர்கள் பசியை ஆற்றும் அப்பம் எங்கும் காணப்படவில்லை. அப்பொழுது தேவன், மனிதர்கள் யாரும் காணாத மன்னாவை (உபா.8:3,16) அவர்களுக்குப் புசிக்கக் கொடுத்தார். நாம் எந்த நன்மையைக் காணக்கூடாதபடிக்குக் கலங்கித் தவிக்கிறோம்? அந்த நன்மையைத் தேவன் இம்மாதத்தில் காணச் செய்வார்.

### 3.சந்தித்து, மாறக்கூடாததை மாற்றினார் :

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறக்கூடாதவராயிருந்த போதிலும் (எபி.13:8), மனிதராகிய நமக்காக ஐசுவரியமுள்ள அவர் தரித்திரனானார் (2 கொரி.8:9). அவர் ராஜாவாக இருந்தபோதிலும், அரண்மனையில் பிறக்காமல், தம்மைத்தாம் வெறுமையாக்கி, ஏழ்மையின் கோலமெடுத்து, முன்னணையிலே பிறந்தார் (லூக்கா 2:12). ஆண்டவர் இயேசுகிறிஸ்து தரித்திரனானதாலே, தாழ்மையானவர்களும் (லூக்கா 1:52), பசியுள்ளவர்களும் (லூக்கா 1:53) உயர்த்தப்பட்டார்கள், திருப்தியடைந்தார்கள்.

இயேசுகிறிஸ்துவின் மாற்றம் தாழ்மையானவர்களின் வாழ்விலும், பசியுள்ளவர்களின் வாழ்விலும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. நீங்கள் எதில் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? அந்த மாற்றத்தை தேவன் இந்த மாதத்தில் அருள்வார்.

இந்த பண்டிகையில், உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் உங்களைச் சந்தித்து, நீங்கள் கேட்க அறியாததை உங்களுக்கு கொடுத்து, காணக்கூடாததைக் காணச்செய்து, மாறக்கூடாததை மாற்றி உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்,
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

### சிந்திக்க ஒரு சிறுகதை

குன்று ஒன்று அருகில் ஓர் ஏழை விதவை வசித்து வந்தாள். அவளுக்கு இரு பிள்ளைகள். ராஜு - வயது எட்டு, ராணி - வயது 7. குன்றின் உச்சியில் ஓர் ஆலயம் இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆலயத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். சுற்றுமுற்றுமுள்ள மக்கள் ஒரு விசேஷித்த காரணத்திற்காக கிறிஸ்மஸ் தினத்தன்று அங்கு ஒன்றாகக் கூடுவர்.

கிறிஸ்துவுக்காகக் கொடுக்கப்படும் காணிக்கைளில் மிகச் சிறந்ததை அறிவிக்க தேவதூதர் வருகை தருவதே அக்காரணம். எல்லாரும் தங்கள் தங்கள் உசிதக் காணிக்கைகளைக் கொண்டுவந்து படைப்பர். அவற்றில் மிகவும் உன்னதமான காணிக்கை வைக்கப்படும்போது தேவதூதர் ஆலயத்தின் மணிகளை ஒலித்து அமுதகானத்தினால் சபையாரை மெய்சிலிர்க்கச் செய்வார்.

கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருந்தது. சிறப்பு ஆராதனையில் பங்கேற்று ஆலயமணியின் ஓசையைக் கேட்க ராஜுவும், ராணியும் ஆவலுடன் காத்திருந்தனர். துக்ககரமாக அவர்களின் தாய் சுகவீனமானாள். ஒரு வாரமாக அவளுக்கு வேலைக்கும் போகமுடியவில்லை. கிறிஸ்மஸ்க்கு நல்ல உணவு சமைக்கவும் முடியவில்லை. அவளுக்கு கிறிஸ்மஸ்

ஆராதனைக்குச் செல்லவும் முடியவில்லை. இருந்தாலும் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி, இருவருக்கும் இரண்டிரண்டு பன்களும், ஆளுக்கு ஒரு ரூபாய் காணிக்கையையும் கொடுத்தனுப்பினாள். இருவரும் கம்பளிச் சட்டையைப் போட்டுக்கொண்டு குன்றை நோக்கி நடக்கத் துவங்கினர்.

குன்றின் அடிவாரத்தில் தாத்தா ஒருவர் குளிரில் சுருண்டு படுத்துக் கிடப்பதைக் கண்டனர். பிள்ளைகளைப் பார்த்தவுடன் கெஞ்சி கரம் நீட்டினார். பிள்ளைகள் ஆளுக்கொன்றாக கொடுத்த பன்களை பசியோடு விழுங்கினார். அவரது அகோரப் பசியைக் கண்ட பிள்ளைகள் மற்ற பன்களையும் கொடுத்துவிட்டனர். ஒரு கம்பளிச்சட்டை கொடுக்கும்படி கேட்டார். ராஜு கொடுத்த சட்டையைப் போர்த்துக்கொண்ட பின்பும் நடுங்கியதால், ராணி தன்னுடைய கம்பளிச் சட்டையையும் கொடுத்தாள். தாத்தாவின் நடுக்கம் நின்றது. அவர் புன்முறுவலுடன் ஆசீர்வதித்தார். நேரமாகிவிட்டதால் பிள்ளைகள் ஓடி ஆலயத்தை அடைந்தனர்.

காணிக்கை அளிக்கும் நேரம், சூட் போட்ட ஒரு பெரிய மனிதர் முன்வந்து காணிக்கைத் தட்டில் தன் கார் சாவியை வைத்தார். ஆனால் மணியின் அசைவோ, சப்தமோ இல்லை. ஒரு பெண் தன் வைர நெக்லசைக் கழற்றித் தட்டில் வைத்துவிட்டு சுற்றிலும் பார்த்தாள். இம்முறையும் மணி ஒலிக்காததால் மக்கள் ஏமாற்றமடைந்தனர். இப்படியே ஒவ்வொருவராக காணிக்கை போட்டனர்.

கடைசியாக சிறுவரின் தருணம். இருவரும் தம் ஒரு ரூபாய் நாணயங்களைத் தட்டில் வைத்தனர். திடீரென்று பரலோக கீதம் ஆலயத்தை நிரப்பி, மணிகள் அருமையாய் ஒலித்தன. ஆராதனை முடிந்தவுடன் பிள்ளைகளை ஆயர் அணைத்துக்கொண்டு விவரங்களைக் கேட்டார். பிள்ளைகள் விவரமாய்க் கூறினதும், மக்களும் சூழ்ந்துகொண்டு நடந்ததை அறிந்தனர். மற்றவர்களிடம் அன்பு கூர்ந்து, அவர்களைப் பராமரிப்பது தேவனுக்குக் காணிக்கை கொடுப்பதற்கு நிகர் என உணர்ந்தனர்.

ஆயரும், மூப்பர்களும் பிள்ளைகளின் வீட்டைச் சந்தித்து, அவர்களது தாயைச் சிகிச்சைக்கு அழைத்துச் சென்றனர். சபையார் உணவு வகைகளையும், துணிமணிகளையும் பிள்ளைகளுக்குக் கொடுத்தனர். கிறிஸ்மஸ் மகிழ்ச்சி அனைவரையும் நிரப்பியது.

வேதவாசிப்புப் பகுதி : 1 யோவான் 4:7-11
மனப்பாட வசனம் :1 யோவான் 4:11

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃ.பர் ஆல்வின்,
உதவி ஆயரம்மா.

# உதவி போதகர் மடல்

இரட்சகரான இயேசுகிறிஸ்துவுக்கு துதி, ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன். 2018-ம் வருடமாகிய இவ்வருடத்தின் துவக்க நாளிலிருந்து இறுதி மாதமாகிய டிசம்பர் மாதம் வரையிலும், இயேசு இரட்சகர் நமக்கு அருளிய அன்பு, அருட்கொடைகள் அனேகம். அகமகிழ்ந்து நன்றி சொல்லுவோம்.

இவ்வருட கிறிஸ்து பிறப்பு பண்டிகை நாட்கள் நம் வாழ்வில் பொருள் நிறைந்ததாகக் காணப்பட இயேசு பாலகரின் கரங்களில் நம்மை அர்ப்பணிப்போம்.

வருட நிறைவு மாதத்தில் கடவுளின் அருட்கொடையான இயேசு இரட்சகரின் ஆற்றலை திருவசனங்களிலிருந்து ஏற்றுக்கொள்வோம்.

### இரட்சிக்கும் இரட்சணியக்கொம்பு A Horn of Salvation

திருமறைப்பாடம் லூக்கா 1:67-75 - தியான வசனம் லூக்கா 1:75

"தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்." 'He has raised up a horn of salvation for us in the house of his servant David.'

பழைய ஏற்பாட்டில் "கொம்பு" என்ற வார்த்தை மிருகங்களைப் பாதுகாக்கின்றதாகவும், மிருகங்களுக்கு வலிமையும், வெற்றியும் கொடுக்கின்றதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலே திருமறையிலிருந்து "கொம்பு" என்ற வார்த்தை ஆற்றலையும், வல்லமையையும் குறிப்பதாக நாம் அறிகிறோம்.

சங்கீதம் 18:2-ல் சங்கீதக்காரன், "கர்த்தர் என் இரட்சணியக்கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாய் இருக்கிறார்" என்று குறிப்பிடுகிறார். சகரியா, லூக்கா 1:75-ம் வசனத்தில் இயேசுநாதர் "இரட்சணியக்கொம்பு" என சாட்சி பகருகின்றார். இரட்சணியக்கொம்பாக இயேசுநாதர் செயல்படுவதை நாம் தியானிப்போம்.

#### 1. இரட்சணியக்கொம்பாக மீட்கும் இயேசு (லூக்கா 1:71,74)

அருள்நாதர் இயேசு, பாவம் என்னும் இருளை அகற்றும் விடியலாக இருக்கிறார். ஏனெனில் அவர் பெயர் இயேசு: அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான் (மத்தேயு 1:21). தீமைக்கு அடிமைப்பட்டுக்கிடந்த மானுடரை கடவுளின் பிள்ளைகளாக மாற்றினார். பாவக்கறை படிந்த மானுடரை தனது இரத்தத்தால் கழுவி தூய்மையாக்கினார். மானுடரின் தோழனாக, மருத்துவராக, பரிந்து பேசுகிறவராக, உணவாக, பலியாடாகத் தன்னை விளங்கப் பண்ணினார்.

பாவம் மானுடரின் முழு ஆள்தத்துவத்தின் செயல்பாடாகவும் இருக்கிறது. ஏசாயா இறைவாக்கினர் கூறுகிறார், உள்ளங்கால் தொடங்கி, உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை. அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது, அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப் படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது என்றார் (ஏசாயா 1:6). பாவம் மானிடரின் வாழ்க்கையை அசைவற்றதாக, இயங்க முடியாததாக மாற்றிவிடும். அருள்நாதர் இயேசு பாவப்பிடியிலும், பாடுகள் நடுவிலும் வாழும் மக்களுக்கு மேன்மை வரச்செய்வார் (ஏசாயா 9:1). அவர்களை பலுகிப் பெருகச் செய்வார். அவர்கள் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்துவார். இரட்சணியக்கொம்பாக இயேசுவின் பிறப்பு பாவ விடுதலையினையும், மீட்பினையும் மனுக்குலத்துக்கு அளிப்பதை நாம் புரிந்துகொள்ள இயலுகின்றது.

## 2. இரட்சணியக்கொம்பாக பிரகாசிப்பிக்கும் இயேசு (லூக்கா 1:78)

1950-ல் வாஷிங்டன் நகரில் நார்த்கேட் ஷாப்பிங் சென்டர் என்ற வணிக வளாகத்தில் மிக உயரமுள்ள டக்ளஸ்மீர் என்ற கிறிஸ்மஸ் மரம் நிறுத்தப்பட்டது. இந்த கிறிஸ்மஸ் மரத்தில் ஒரு படம் அனைவரையும் கவரக்கூடியதாக இருந்தது. காலணி அணியாத ஒரு மனிதன் கடின வேலை, கடின சுமை, வியாதி, பல இழப்புக்கள், வன்முறையின் பாதிப்பு என்னும் ஒரு பெரிய பாரத்தைத் தன் தோள்மேல் சுமந்து தரையையே பார்த்துக் கொண்டிருக்கிறதைப் போன்ற காட்சியும், அதினூடே ஒரு மாபெரும் நட்சத்திரம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதைப் போன்ற காட்சியும், இடம் பெற்றிருந்தது. பாடுகளை அகற்றும் புதிய விடியலாக இயேசு அவதரித்தார். இதனை சகரியாவின் பாடலும் தெளிவுபடுத்துகிறது (லூக்கா 1:78).

செபுலோன் நாட்டிலும், நப்தலி நாட்டிலும் பிற இனத்தவர் வாழும் கலிலேயாவிலும் காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர்ஒளி உதித்துள்ளது எனக் குறிப்பிட்டார் (ஏசாயா 9:1,2). நம் வாழ்வில் இரட்சணியக்கொம்பாக விளங்கும் இயேசுவை அறிவிக்கும் நட்சத்திரங்களாக பிரகாசித்திட கர்த்தர் உதவிபுரிவாராக.

உங்கள் அனைவருக்கும் இவ்வருட கிறிஸ்து பிறப்பு பண்டிகை வாழ்த்துக்களை, இராஸ் அல் கைமா திருச்சபை மக்கள் சார்பிலும், போதகர் குடும்பத்தின் சார்பிலும் தெரிவிக்கிறேன்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இம்மானுவேலராக நம்முடனிருந்து நம்மைக் கரம்பிடித்து நடத்திய இயேசு இரட்சகருக்கு துதியும், மகிமையும் செலுத்துகிறேன். இவ்வருடத்தின் நிறைவு மாதத்தில் பிரவேசிக்கச் செய்த கர்த்தருக்கு நன்றி கூறி உங்களை வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

திருமறைப்பாடம் : லூக்கா 1:27-38 - தியான வசனம் : லூக்கா 1:28

அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து:
கிருபை பெற்றவளே வாழ்க,
கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்,
ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

மனுக்குலத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவர இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரம்தான் மரியாள். யோசேப்பைத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்தவள். இஸ்ரவேலில் அநேக கன்னிகைகள் இருந்தார்கள். ஆனால் கர்த்தருடைய கண்கள் மரியாளைக் கண்டது. ஆகவே அவள் ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் என அழைக்கப்படுகிறாள். இயேசுகிறிஸ்துவின் தாயாக மரியாள் மேன்மை அடைந்ததைக் குறித்து திருமறை வசனங்களிலிருந்து தியானிப்போம்.

### 1. இறை கிருபை பெற்ற மரியாள் (லூக்கா 1:30)

இறைவனால் அனுப்பப்பட்ட தூதன் மரியாளின் இல்லத்தில் வந்து கூறும் முதல் செய்தி வாழ்த்துச் செய்தி. “கிருபை பெற்றவளே வாழ்க”

கிருபை என்பது தகுதியில்லாத ஒருவருக்குக் காண்பிக்கப்படும் தயவு ஆகும். இறைமகன் இவ்வுலகில் அவதரிக்க கன்னிகையாய் இருந்த மரியாளைத் தெரிந்துகொண்டது அவர் கிருபை.

தூதனின் வாழ்த்துச் செய்தியைக் கேட்டவுடன் மரியாள் கலங்கினாள். மரியாளின் பயத்தைப் புரிந்து கொண்ட தூதன், மரியாளே பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் (லூக்கா 1:30) என்று கூறியது மட்டுமல்லாமல், பிறக்கப்போகும் குழந்தை எப்படிப் பட்டதாயிருக்கும் என்பதையும் கூறுகின்றார் (லூக்கா 1:32,33).

இறைவன் நமக்குத் தந்திருக்கும் நல்ல குடும்பம், நல்ல வேலை, சுகமான வாழ்வு இவையெல்லாம் அவர் நமக்குப் பாராட்டின கிருபை என்பதை உணர்ந்தவர்களாய் வாழ்வோம்.

### 2. இறை வார்த்தையை விசுவாசித்த மரியாள் (லூக்கா 1:38)

தூதன் கூறிய செய்தியைக் கேட்டவுடன் மனதில் பல கேள்விகள் எழும்பின. இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்று மரியாள் கேட்டவுடன் தூதன் பரிசுத்த ஆவியானவர் உன்மேல் நிழலிடும்போது (லூக்கா 1:35) இது நடக்கும். மேலும் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்கா 1:37) என்ற தூதனின் வார்த்தையைக் கேட்டதும் மரியாள் விசுவாசித்தாள். எலிசபெத்தும் மரியாளிடம், "விசுவாசித்தவளே பாக்கியவதி" (லூக்கா 1:45). இதைத் தொடர்ந்து மரியாள் பாடுகின்ற பாடல் (லூக்கா 1:46-55) தேவதூதனால் சொல்லப்பட்ட வார்த்தையை எவ்வளவாய் விசுவாசித்தாள் என்பதைக் காட்டுகிறது.

ஆம் விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது. நாமும் இறைவார்த்தையை முழுமையாய் விசுவாசிப்போம்.

### 3. இறைத் திட்டத்திற்கு அர்ப்பணித்த மரியாள் (லூக்கா 1:38)

இறைவன் தன்னைத் தெரிந்தெடுத்ததை மாபெரும் பாக்கியமாக நினைத்தாள். ஆகவேதான் தன்னைப்பற்றி பிறர் ஏளனமாகப் பேசுவார்கள் என்பதை அறிந்தும் இறைவனிடம் உள்ள விசுவாசம், அதாவது கர்த்தர் அனைத்தையும் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கையில் "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை" என முற்றிலுமாக அர்ப்பணித்தாள்.

அன்று இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைகளாய் வேதனைப்பட்ட போது அவர்கள் வேதனையை அறிந்து, துன்பநிலையை உணர்ந்து அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்க இறைவாக்கினர் மோசேயை அழைத்தார்.

அதேபோல் நாம் பாவத்திலிருந்து மீட்கப்படுவதற்காக கடவுள் தன் திருமைந்தன் இயேசுவை மரியாளின் கருவில் குழந்தையாகத் தருவதற்கு மரியாள் தன்னை இறைச்சித்தத்திற்கு அர்ப்பணித்தாள்.

மரியாள் இறைவார்த்தைக்குக் கீழ்படிந்து தன்னை அர்ப்பணித்ததினால் இயேசு பாலகனைப் பெற்றெடுக்கும் மேன்மையின் அனுபவத்தைக் காண்கின்றாள். நாம் நமது வாழ்வில் இயேசுபாலகனை தினமும் ஏற்றுக்கொண்டவர்களாக வாழ்வது நம்மை மேன்மையடையச் செய்ய உதவும்.

இவ்வருட கிறிஸ்து பிறப்பு நாட்கள் அர்த்தமுள்ளதாக அமைய இயேசு இரட்சகர் துணைபுரிவாராக. உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி J.விஜிலா ராணி
உதவி போதகரம்மா.

# செயலர் மடல்

மனித அவதாரம் எடுத்து, மனுக்குலத்தை மீட்க வந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இப்பண்டிகைக் காலங்கள் உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக அமையுமென்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

கடந்த நவம்பர் 2ஆம் தேதி சிறுவர் வேதபாடசாலையின் சிறப்பு மதிப்பீட்டுத் தேர்வு நடைபெற்றது. நவம்பர் 8, 9 ஆகிய தேதிகளில் FEBA (Far East Broadcasting Association) நிறுவனத்தைச் சேர்ந்த சகோ. பென்ஜமின் அவர்கள் நமது சிறுவர் வேதபாடசாலையின் இளம் தலைமுறையினருக்கும், அவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்குமாக தனியாகவும், இணைந்தும் சிறப்புக் கூடுகைகளில் செய்தி கொடுத்து சிறப்பித்தார்கள். இக்கூடுகை அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. நவம்பர் 16ஆம் தேதி நமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகையை நாம் குடும்பமாக “முதல் அறுவடை” (The First Harvest) என்ற தலைப்பில் மிகச்சிறப்பாக கொண்டாட தேவன் கிருபை செய்தார். இவ்விழாவில் சிறுவர்கள் சிறப்புக் காணிக்கைகளைப் படைத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். பண்டிகை கொண்டாட இடம் தந்து உதவிய இந்தியன் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்திற்கும், அதற்கு உறுதுணையாக இருந்த Dr. டேவிட் தாமஸ் அலெக்ஸாண்டர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இதற்காக மிகவும் ஜெபித்து, உழைத்து, மிகவும் உதாரத்துவமாக கொடுத்த அனைத்து கரங்களையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. இவ்வருடமும் இவ்விழாவை பாரம்பரிய முறையில் கொண்டாட உதவிய அனைவருக்கும் திருச்சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நவம்பர் 19 முதல் 24 வரை நம் திருச்சபையின் வருடாந்திர எழுச்சி கூடுகை (Annual Convention) நமது சபையிலும், நமது கிளைச்சபைகளிலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் பேராசிரியர் முனைவர் மார்ட்டின் தேவபிரசாத் அவர்களும், அவர்களுடைய துணைவியாரும் சாஸ்திரியாரின் வாரிசுமான சாஸ்திரியார் சாராள் மார்ட்டின் அவர்களும் காலத்தால் அழியாத கீர்த்தனைப் பாடல்களோடு, திருச்சபையின் பல்வேறு குழுவினருக்கும் தேவ செய்தி கொடுத்து நம் திருச்சபையின் அங்கத்தினர்களை ஆவிக்குள்ளாக மிகவும் உற்சாகப்படுத்தினார்கள். அவர்களுக்கு திருச்சபையின் சார்பாக என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டிகையின் கொண்டாட்டங்கள் மத்தியில், நாம் நம் சாட்சியை காக்கும் வண்ணமாக நம் நடக்கைகள் பரிசுத்தமாக அமைய தேவனை வேண்டுகிறேன். விசேஷமாக பண்டிகையின் விடுமுறைக் காலங்களில் தாய்நாடு மற்றும் வேறு இடங்களுக்குச் செல்லும் நம் திருச்சபையின் அங்கத்தினர்களுக்கும் அவர்கள் பிரயாணங்கள் பாதுகாப்பாகவும் இனிமையாகவும் அமைய என் மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் விடுமுறை காலங்கள் சிறப்பாகவும் ஆசீர்வாதமாகவும் தேவனுடைய சித்தத்தின்படி அமைய நம் தேவாதி தேவனை வேண்டுகிறேன். வருகின்ற டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் அனைத்து நிகழ்வுகளுக்காகவும், நமது திருச்சபைக்காகவும், திருச்சபையின் அனைத்து ஊழியங்களுக்காகவும் உங்கள் தனி ஜெபம் மற்றும் குடும்ப ஜெபங்களில் ஊக்கமாக ஜெபிக்குமாறு மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இரட்சகராய் மனுவுறு எடுத்த நம்மை மீட்டெடுத்த நம் கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் கூறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

Jernaus Britto, Secretary.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Miss Julita Jemi Justin | 2802 | Dubai |
| 2 | Mr. Dispen Raj R | 2803 | Dubai |
| 3 | Mr. Rabbi Rajasekar | 2804 | Dubai |
| 4 | Mr. S.Sadheesh Babu | 2805 | Dubai |
| 5 | Mr. Rajiv Jedidiah | 2806 | Dubai |
| 6 | Mr. Sargunam T | 2807 | Dubai |
| 7 | Mr. G.Stephen Satharack | 2808 | Dubai |
| 8 | Mr. R. James Gnana Prakasam | 2809 | Dubai |

## NEW ARRIVAL

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Jotham Theophilus
S/o.Mr. Harold Packiaraj & Mrs. Julie Asha
15-03-2018

Abbyhael
D/o.Mr. Sibi Vetha Raj & Mrs. Genilin
31-10-2018

## மோசே

கோடைக்காலத்தில் வெயில் வெட்பத்தால் பார்வோனுடைய உடலிலிருந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. தன்னுடைய சுகவீனம் தன்னை அதிகமாக மேற்கொள்வதைக் கண்டு, அதிகாமை தன்னிடமாய் அழைத்துக்கொண்டு வருமாறு கட்டளையிட்டார். அப்பொழுது அதிகாமை ராஜாவாக்கினார்கள். இதற்குப் பிறகு, மூன்று வருடங்கள் கழித்து பார்வோன் மிகுந்த வெட்கத்தோடே, அவமதிப்புடன், வெறுப்புடன், மரித்துப்போனார். பார்வோனை அவரது வேலைக்காரர் சுமந்து, சோன் மிஸ்ராயீம் என்னும் இடத்திலுள்ள, எகிப்தின் ராஜாக்களுடைய கல்லறையில் அடக்கம் பண்ணக் கொண்டு வந்தனர். மற்ற பார்வோன்களைப் போன்று அவரது உடல் சுத்தமாக இராதபடியால், துர்நாற்றம் வீசினபடியால், அவரைப் பதப்படுத்தக் கூடாமல், வேக வேகமாக அடக்கம் செய்தனர். பார்வோன் இஸ்ரவேல் மக்களுக்குச் செய்த துன்பத்தினிமித்தம் இது கர்த்தரால் வந்த தண்டனையாயிருந்தது.

அதிகாம் ராஜாவானபோது இருபது வயதுள்ளவனாயிருந்து, எகிப்து முழுமையையும் நான்கு வருடங்கள் ஆட்சி புரிந்தான். அதிகாம் ராஜாவாகி அதிக காலம் ஆளவில்லை. அதிகாமையும் மற்ற அரசர்களைப் போன்று பார்வோன் என்றே அழைத்தனர். அவன் அரசாண்டபோது தன்னுடைய தகப்பனையும் மிஞ்சினவனாக இஸ்ரவேலரின் வேலைப்பளுவை மேலும் அதிகமாக்கினான்.

அதிகாம் கோசேனுக்குச் சென்று இஸ்ரவேல் புத்திரரிடம் வந்து, அன்றன்றுள்ள வேலைகளை சரியாக முடியுங்கள். என் தகப்பனாரின் காலத்தில் உங்கள் கைகள் வேலைகளை குறைத்ததுபோல குறைக்க வேண்டாம் என்று கூறி அவர்கள் அதிகாரிகளை நியமித்தான். அவர்கள் தங்களுக்குக் குறிப்பிட்ட அளவு செங்கலை அறுக்கும்படியாக கட்டளைக் கொடுத்து எகிப்திற்கு திரும்பினான்.

அதிகாமின் அதிகாரிகள் இஸ்ரவேலரை நோக்கி, தினமும் உங்கள் வேலையைச் செய்து முடித்தபின்பு செங்கலின் தொகையை எண்ணிக்கொள்ளுங்கள். அதில் ஒன்றும் குறைவுபடக்கூடாது. அதின் எண்ணிக்கையில் ஒன்று குறைவுபட்டாலும், அதற்குப் பதிலாக உங்கள் பிள்ளைகளை எடுத்துக்கொள்வேன் என்று பார்வோனது கட்டளையைக் கூறி அதன்படியே செயல்பட்டனர். இஸ்ரவேல் புத்திரரின் வேலையிலே குறைவுகளைக் காணும்போது அதிகாமின் அதிகாரிகள் இஸ்ரவேல் புத்திரரின் கூடாரங்களுக்குச் சென்று அவர்களது மனைவியின் மடியில் தவழும் பச்சிளங்குழந்தைகளை அதிகாரத்தோடு பறித்துக் கொண்டு போய்விடுவார்கள். குழந்தைகளின் அழுகுரலைக் கேட்டு பெற்றவர்கள் அழ, அச்சிறுகுழந்தைகளை செங்கலுக்குப் பதிலாக மதில்மேல் வைத்து விடுவார்கள். அதிகாரிகள் முன்னிலையில் கட்டடத்தில் வைத்து கட்ட குழந்தையின் அழுகையினூடே அவர்களது கண்ணீர் அக்குழந்தையின்

மேல் வழிந்தோடும். இப்படி அதிகாரிகள் பல நாட்களாக செயல்படுத்தி வந்தனர். யாரும் இஸ்ரவேலரின் குழந்தைகள் மீது இரக்கப்படவோ, மனதுருகவோ இல்லை. இப்படியாக கொல்லப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை இருநூற்று எழுபது. சில குழந்தைகள் பெலகீனப்பட்டுப் போய்விடுவார்கள். சிலர் தங்களது குழந்தைகளை உயிரற்றவர்களாக எடுத்துக்கொண்டனர்.

பார்வோனாகிய அதிகாம் தன் தகப்பனாரை விட இஸ்ரவேல் மக்களது வேலைப்பளுவை மிகவும் அதிகமாக்கினான். இஸ்ரவேல் மக்கள் தங்கள் வேலையினிமித்தம் தினமும் பெருமூச்சு விட்டு, பார்வோனின் காலத்திற்கு பிறகு அவரது மகன் நம் வேலையை சுலபமாக்குவார் என்றிருந்தோம். மாறாக இவர் நம்முடைய வேலையை அதிகமாக்கியுள்ளாரே என்று கர்த்தரை நோக்கி அழுதனர். கர்த்தர் அவர்களது அழுகையின் சத்தத்தைக் கேட்டார். கர்த்தர் தான் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் செய்த உடன் படிக்கையை நினைவுகூர்ந்தார். அவர்களது பாடுகளையும் அவர்களது வேலைப்பளுவையும் பார்த்து அவர்களை விடுவிக்க முடிவுசெய்தார்.

மோசே அந்நாட்களில் ரெகுவேலின் வீட்டில் பத்து ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டிருந்தார். ரெகுவேலின் மகளாகிய சிப்போராள் அவர்மீது இரக்கப்பட்டு, இரகசியமாக அவருக்கு அப்பமும் நீரும் அளித்துவந்தார். பத்தாவது வருடம், அதாவது அதிகாம் இராஜ்யபாரத்தின் முதலாம் ஆண்டு சிப்போராள் தன் தகப்பனாகிய ரெகுவேலைப் பார்த்து, இந்த பத்து ஆண்டுகளாக யாரும் இந்த எபிரெயனைத் தேடவும் இல்லை, விசாரிக்கவும் இல்லை. ஆகவே உம்முடைய பார்வைக்கு நலமாகக் கண்டால், அவன் உயிரோடு இருக்கிறானோ இல்லையோ என்று ஆட்களை அனுப்பி விசாரிக்கலாம் என்றாள். அவள் மோசேக்கு உதவுவதை ரெகுவேல் அறியவில்லை. ரெகுவேல் சிப்போராளுக்குப் பிரதியுத்திரமாக, பத்து வருடங்களாக ஆகாரமின்றி சிறையில் இருப்பவன் எப்படி உயிரோடு இருக்கமுடியும்? என்றார்.

அதற்கு சிப்போராள், மெய்யாகவே எபிரெயரின் கர்த்தர் மகா பெரியவரும், அதிசயமானவரும், எப்பொழுதும் அவர்களுக்கு அற்புதங்களை செய்கிறவராமே. ஆபிரகாமை கல்தேயரின் ஊரிலிருந்து விடுவித்து, ஈசாக்கை அவரது தகப்பனாரின் பட்டயத்துக்கு விடுவித்து, யாக்கோபை யாப்போக்கு நதியண்டையில் கர்த்தருடைய தூதரிடமிருந்தும் விடுவித்தவராமே. அதுமட்டுமல்லாமல் இந்த மனிதனைக் கொண்டும் நிறைய காரியங்கள் செய்திருக்கிறார். எகிப்தின் நதிக்கு விடுதலையாக்கி, பார்வோனின் பட்டயத்திற்கு விடுவித்து, கூஷின் குமாரருக்கு விடுவித்தவர் பஞ்சத்திலிருந்தும் அவனைக் காக்க வல்லவர் என்றாள்.

தொடரும்...

நன்றி: யாசேரின் புத்தகம்.

தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

# பேசு சிறப்பு இயேசு பிறப்பு

கருவறை நிறைவுறும் கிருபைநேரம் ! வருகிறார்
வருகிறார் மரியும்−−குடிமதிப்பைத்
தருகிறார் அரசிடம்
திரிகிறார் திரிகிறார் தங்கிடம் ஏங்கிடம்
பாரமும் தூரமும்−−பிரசவ
நேரமும் நெருக்குறும்

இரவின் நடுவில் இறைமுன் உரைபோல்
பாலன் பிறந்தார்−−இயேசு
பாலன் பிறந்தார்
மரியின் வயிற்றில் நெறியின் பயத்தில்
பெத்தலை ஓரத்தில்−−பத்திரம்
சத்திரத் தொழுவத்தில்

உன்னத மைந்தன் மண்ணக வேந்தன்
புல்லணைப் படுக்கை−−பழந்துணி
மெல்லுடல் உடுக்கை
தங்நிலை தாழ்த்தினும் முங்நிலை ரட்சகன்
இத்தரை மீட்பன்−−இயேசு
ரத்தத்திறன் சுத்தப்பரன்

இருட்டில் முரட்டுப் பனிவயல் காட்டில்
உறங்கும் மேய்ப்பர்−−விரைந்து
நெருங்கும் அங்கியர்
சிறந்த காவல் இருந்த மங்தையில்
பரவும் பிரகாசம்−−வான்தூதன் !
திறந்தகண் மறந்தஇமை !!

"பயப்படா திருங்கள் சனங்களின் மனங்களின்
சந்தோச நற்செய்தி−−தருகிறேன்
வந்தவர் இந்தஊர்
வயல்தொடும் பெத்தலை தாவீதைப் பெற்றவூர்
கர்த்தராங் கிறிஸ்து−−ரட்சகரும்
பிறந்தார் ! " அறிந்து

வான தூதர் ஞான போத(க)ர்
கானங் கனியத்--திரண்டார்
வானவர் சேனை
தானே இறங்கி வானை வாழ்த்தி
பூமியை வாழ்த்தி-மனித
மேன்மையை வாழ்த்தி...

ஈரா யிரம்மேல் வேரோடும் நூற்றாண்டுகள்
இயேசுஅலை வீசுநிலை--இந்நாள்
பேசிக் களித்து
ஊருலகம் கைகுலுக்கும் உற்சாகத் திருநாள்
உறவுச் சிறகால்--உலகை
வருடும் பரவசம் !

ஆதாரம் : லூக்கா 2
கவிதை எண் : 213.
கவி புனைவு : மணிமுத்து.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - டிசம்பர் 2018

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 07-12-2018 | நற்செய்தியைக் கொண்டாடுவோம் | யாத்தி. 2:1-10 | அப்போ. 9:10-18 | லூக்கா 1:46-56 | 117 |
| 14-12-2018 | திருமறை ஞாயிறு | உபாகமம் 11:19-25 | வெளிப். 10:1-11 | லூக்கா 1:39-45 | 119: 33-40 |
| 21-12-2018 | பாவக்கட்டில் இருந்து விடுதலை | யாத்தி. 14:1-14 | ரோமர் 8:1-11 | யோவான் 8:31-38 | 37:1-12 |
| 25-12-2018 | ஒரு புதிய உதயம் | ஏசாயா 9:1-7 | கலாத்தியர் 4:1-7 | லூக்கா 2:1-14 | 98 |
| 28-12-2018 | குடும்ப ஞாயிறு | ஆதியா. 33:1-11 | எபேசியர் 6:1-9 | லூக்கா 15:11-24 | 91 |
| 31-12-2018 | பழைய ஆண்டு வழிபாடு | யோசுவா 24:13-18 | | | |
| 01-01-2019 | புத்தாண்டு உடன்படிக்கை வழிபாடு | ஆதியா. 9:8-17 | 2தீமோத். 2:19-21 | மத்தேயு 5:1-10 | 116 |

# இம்மகிழ்ச்சி மாத சிறப்பு நிகழ்ச்சிகள்!

| | | | |
|---|---|---|---|
| துபாய் | 10-12-2018 | இரவு 08:00 மணி | சிறுவர், பாடகர் குழுவின் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை, St. Paul's Hall. |
| | 14-12-2018 | மாலை 04:30 மணி | கிறிஸ்துமஸ் மர விழா JSS School Auditorium |
| | 25-12-2018 | அதிகாலை 04:00 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை பரிசுத்த திருவிருந்து ஆராதனை St. Paul's Hall. |
| | 31-12-2018 | நள்ளிரவு 11:00 மணி | ஆண்டு முடிவு–புதுவருட பண்டிகை உடன்படிக்கைத் திருவிருந்து ஆராதனை, St. Paul's Hall. |
| ஃபுஜைரா | 07-12-2018 வெள்ளி | மாலை 5:00 மணி | ஸ்தோத்திரப்பண்டிகை |
| | 14-12-2018 வெள்ளி | இரவு 07:00 மணி | கிறிஸ்துமஸ் மரவிழா |
| | 21-12-2018 வெள்ளி | காலை 09:00 மணி | சபையார் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை |
| | 24-12-2018 | இரவு 11:30 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| | 01-01-2019 | காலை 04:00 மணி | புதுவருட பண்டிகை உடன்படிக்கை ஆராதனை பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| இராஸ் அல் கைமா | 14-12-2018 | மாலை 07:30 மணி | கிறிஸ்துமஸ் மர விழா |
| | 21-12-2018 | மாலை 07:30 மணி | கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை |
| | 25-12-2018 | இரவு 07:30 மணி | கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனை பரிசுத்த திருவிருந்து ஆராதனை |
| | 31-12-2018 | இரவு 11:30 மணி | புதுவருட பண்டிகை உடன்படிக்கை ஆராதனை பரிசுத்த திருவிருந்து ஆராதனை |

# நீங்கள் கிறிஸ்தவரா...

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.
யோவான் 1:18

பக்தருக்கு
அருளை
அள்ளிவழங்கும்
அருளாளர்.
பரமானந்தம்
தரும்
பரத்தில் வீற்றிருப்பவர்.
ஏகமாக இருக்கும்
ஏகக் கடவுளாக
இருக்கும் பிதாவைக்
கண்டவர்தான் யார்...
பிதாவின்
மடியில் தவழ்கிற
ஒரே பேறான
குமாரன் இயேசு
ஒருவரே...
வேதத்தின்
கோட்பாடுகளை
மனித வாழ்வில்
மீண்டும்
நிலைநாட்டவும்
எங்கும் எதிலும்
பாவம்கூடி
கொடுங்கோல்
ஆண்டபோது
மக்கள்வழி
தெரியாது
தவித்தபோது
பாவத்திலிருந்து
மனிதரை
மீட்கும் மீட்பராக
இயேசுவை - ஒரு
சாதாரண மனிதராக
உலகில் அவதரிக்க
வைக்கிறார் பரமபிதா.

தீர்க்கதரிசிகள்
அறிந்ததே
விண்ணும் மண்ணும்
மலர்மாரி பொழிந்ததே
உலகம் வியந்ததே
இயேசு
ஏழையின் வீட்டில்
அவதரித்தார்.
இயேசு
சர்வ வல்லமை
உள்ள கடவுள்
எனினும்
தானும் ஒரு
மனிதராகவே
நடந்து கொள்கிறார்.
அதிசயங்களையும்
அற்புதங்களையும்
அன்றாடம்
நிகழ்த்துகிறார்
தானே ஜெபம்
செய்கிறார்.
அதின்படி வாழ்ந்து
காட்டுகிறார்.
இயேசுவே பிதாவை
வெளிப்படுத்தினார்.
'என்னைக்
கண்டவன்
பிதாவைக்
கண்டான்.'
இயேசுவின்
திருவாய் மொழி.
அன்பரே... அன்பரே...
இயேசுவின் மூலமே
பிதாவை
அடையமுடியும்.

ஒருவர்...
அறிவு ஆற்றல்
திறன் இருப்பினும்
இயேசு போதித்த
எளிமை, பணிவு
அன்பு
தன்னைப்போல்
பிறரை நேசி இவை
நம்மிடம்
இல்லையெனில்
நாடக நடிகரின்
வேஷம்போல்
எல்லாமே
கலைந்துபோகும்.
இயேசுவின்
அருள்மலர்
என்றுமே வாடாது
இயேசுவை
தேடாது போனால்
என்றுமே நம்முடன்
அருள் கூடாது.
இன்றைய
கிறிஸ்மஸ்
திருநாளில்
இயேசுவின்
அருளோடு
மகிழ்வுடன்
வளமுடன்
வளர்வோம்
வாழ்வோம்.

அனைவருக்கும்
Mens Fellowship-ன்
கிறிஸ்மஸ்
நல்வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 02-12-2018 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, இரட்சியும், நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக." சங்கீதம் 20:9

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- நமது ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை, வருடாந்திர நற்செய்திக் கூட்டங்கள், தியான முகாம் யாவும் சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- நடைபெறவுள்ள ஃபுஜைரா கிளைச்சபையின் ஸ்தோத்திரப்பண்டிகையின் ஆசீர்வாதத்திற்காகவும், கிறிஸ்துமஸ் பண்டிகை சிறப்பு நிகழ்ச்சிகள், பண்டிகை ஆராதனை யாவும் சிறப்பாக நடைபெறவும் ஜெபிப்போம்.

"கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார்." சங்கீதம் 28:6

